# பாரதியாரின் படைப்புகளில் அறிவியல் சிந்தனைகள்

அபார்த்திபன்.
உதவிப்பேராசிரியர்,ஆங்கிலத்துறை,
வி(தன்னாட்சி) கல்லூரி.நா.செ.நா.இ.,விருநகர் .626001.

46

**ஆய்வுச் சுருக்கம்**

பாரதியாரின் கவிதைகளிலும் கட்டுரைகளிலும் எண்ணிலடங்காத புதுமைச் சிந்தனைகள் நிரம்பிக் கிடக்கின்றனஆகவே ., பாரதியாருடைய படைப்புகளில் சமூகப் பார்வை எத்தன்மையில் இருக்கின்றன என்பதையும் அவரது அறிவியல் பார்வை எத்தன்மையிலானது என்பதையும் விளக்குகின்றது இக்கட்டுரைஅறிவியல் பார்வ .ையில் வெளிப்பட்ட பாரதியாரின் புராணக் கதை பற்றிய பார்வைபாரதியின் கட்டுரைகளில் வெளிப்படும் அறிவியல் கூறுகள் ஆகியன இடம் . .பெறுகின்றன

**ஆய்வு நோக்கம்**

பாரதியாரின் படைப்புகளில் பழமையும் புதுமையும் சமஅளவில் பயணித்து வருகின்றன . இருப்பினும், படைப்புகளில் உள்ளடக்கத்தை மையமிட்டுப் பேசுகின்ற சில திராவிட சித்தாந்தத் திறனாய்வாளர்கள் இவரது படைப்புகளில் சில சாத்திரக் கூறுகள் ஏற்புடையதாய் இல்லை என மறுதலிக்கின்றஆனால் ., பாரதியாரின் படைப்புகளில் புராணத்தில் இழையோடியுள்ள சில ஏற்பில்லாப் புழுகுக் கதைகளைப் புறக்கணித்த பாங்கு வெளிப்பட்டு நிற்கின்றதை எடுத்துக்காட்டும் தன்மையை நோக்கமாகக் கொண்டு இவ்ஆய்வு வெளியாகின்றது.

குறிச் சொற்கள் பாரதியார் கவிதைகள் :, அறிவியல் பார்வை, புராணமும் கதை மரபும்,எழுத்தும் சமூகமும்.

**தோற்றுவாய்**

மனிதன் காடுகளில் வாழ்ந்து காட்டு விலங்குகளை உணவாக்கி, இலைதழைகளை உடையாக்கி, வேட்டை சமூகமாக நாடோடி வாழ்க்கை வாழ்ந்தவன், வேளாண் தொழில் செய்து நிலையான வாழ்க்கையை வாழத் தொடங்கியதிலிருந்து அறிவியலின் பங்களிப்பு ஆரம்பமாகிறதுமனித . இனத்தின் முதல் கண்டுபிடிப்பான சக்கரமும் அதனைத் தொடர்ந்து வந்த ஏனைய கண்டுபிடிப்புகளும்அவன் அறிவியல் பார்வையின் ஆக்கத்தைக் காட்டுகிறதுஅறிஞர்களும் . இலக்கியவாதிகளும் தத்தம் எழுத்துகள் மூலமாகவும், பேச்சுக்கள் மூலமாகவும் அறிவியல் சிந்தனைகளை அடித்தட்டு மக்களுக்கும் கொண்டு சேர்த்தனர்அத்தகைய சிந்தனையாளர்களில் . .பாரதியாரின் பங்கு அளப்பெரியது

பாரதியாரின் எழுத்தும் சமூகமும் :

பாரதியார் கவிஞர், கட்டுரையாளர், சமூகச்சீர்திருத்தவாதி, பத்திரிகையாளர் எனப் பல்பரிமாணங்களைக் கொண்டவர்இவரது எழுத்துகளின் வீரியம் இளைஞர்களுக்குத் . பாரதி .தேசப்பற்றினையும் தேச விடுதலை வேட்கையினையும் தூண்டும் விதமாகவும் அமைந்தன தன்தாய்நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்டவர்சாதிகளற்ற சமத்துவம் நிறைந்த சமுதாயம் காண . .பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் களைந்து சமத்துவ சமுதாயம் காண முற்பட்டவர் .விழைந்தவர் .அத்தகைய மகத்தான மனிதனின் அறிவியல் பார்வையை விவரிக்கிறது இக்கட்டுரை

**இலக்கியமும் அறிவியல் பார்வையும்**

அறிவியல் பார்வை என்பது அறிவியல் அறிவிலிருந்து மாறுபட்டதுஅறிவியல் அறிவு என்பது . கும் போதிய அறிவியல் சார்ந்த சாதனங்கள் கண்டுபிடிப்பதற்கும் அதனைக் கையாலுவதற் மாறாக .அறிவினைக் கொடுக்கிறு, அறிவியல் பார்வை இதுகாரும் மக்களிடையே பொதிந்திருக்கும் அறியாமையைச் சாடி அவர்களைச் சிந்திக்கத் தூண்டும் செயலினைச் செய்வதாகும். அறிவியல் எத்தகைய கொள்கைககளையும் கோட்பாடுகளையும் ஆராயாமல் ஏற்றுக்கொள்ளாது. பல கட்ட ஆய்வுக்களுக்கு உட்படுத்தி அதன் தரவுகளின் அடிப்படையிலே கருத்தினை ஏற்கவும் அதனைப் பரப்பவும் செய்கிறது.

அறிவியல் பார்வை எத்தகைய தகவல்களையும் நிகழ்வுகளையும் ஆராய்ந்து பார்க்கப் பணிக்கிறது . அறிவியல் பார்வையின் அடிப்படையை வள்ளுவர் பின்வருமாறு வாய்மொழிகிறார்:

”எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்

மெய்ப்பொருள் காண்ப தறிவு.” (குறள் 423)

எந்தச் செய்தியை எவர் கூறிடக் கேட்பினும் அதனின் உண்மைத் தன்மையைச் சோதித்து அறிய வேண்டும்யார் சொன்னாலும் நமது அறிவிற்கு உட்படுத்தி ஆராய வேண்டுமே தவிர ., உடனடியாக எதையும் நம்பிடக்கூடாது என்று உறுதிபடுத்துகிறார்மேலும் ., இதே கருத்தினை மற்றுமொரு குறளின் வாயிலாகப் பொருளின் தன்மையை எத்தன்மை கொண்டதாக இருந்தாலும் அதன் உண்மைத் தன்மையை ஆராயப் பணிக்கிறார்.

”எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்

மெய்ப்பொருள் காண்பது அறிவு.” (குறள் 355)

பாரதியார் தன்னுடைய கவிதைகளிலும் கட்டுரைகளிலும் அறிவியல் சிந்தனைகளை அள்ளிக்கொடுத்துள்ளார் அவரின் .அறிவியல் பார்வை, பெண்களின் முன்னேற்றம், பொருளாதாரச் சிந்தனை மொழி வளர்ச்சி மற்றும் கல்வி பற்றிய கருத்துகள் மற்றும் சமூகச்சீர்திருத்தச் சிந்தனைகள் எதுவாயினும் அவரின் ஆய்வும்அணுகுமுறையும் ., அறிவியல் இயல்பைக் கொண்டது என்றால் அது மிகையல்ல.

**பாரதியின் அறிவியல் பார்வை :**

நாட்டில் சாதிமத பேதமின்றி நாட்டு மக்கள் அனைவரும் ஒற்றுமையுடனும் ஒருதாய் மக்களாய் நல்வாழ்வு வாழவேண்டும் என்று அறைகூவல் விடுக்கிறார். ஏழை யென்றும் அடிமையென்றும் எவனும் இல்லை ஜாதியில், இழிவு கொண்ட மனித ரென்பது இந்தி யாவில் இல்லையே வாழி கல்வி செல்வம் எய்தி மனம கிழ்ந்து கூடியே மனிதர் யாரும் ஒருநிகர் சமானமாக வாழ்வமே(விடுதலை) !

தமது அணுகுமுறையின் அடிப்படையைப் பாரதி தனது சுயசரிதையின் தொடக்கப் பகுதியிலேயே **தெளிவாகப் பின்வருமாறு பதிவு செய்கிறார்:**

“மாயை பொய்யெனல் முற்றிலும் கண்டனன்; மற்றும் இந்தப் பிரமத் தியல்பினை ஆய நல்லருள் பெற்றிலன்; தன்னுடை அறிவினுக்குப் புலப்படல் இன்றியே, தேய மீதெவரோ சொலும் சொல்லினைச் செம்மை யென்று மனத்திடைக் கொள்வதாம் தீயபக்தி இயற்கையும் வாய்ந்திலேன்; சிறிது காலம் பொறுத்தினும் காண்பமே”

தெய்வ பக்தி, தேசபக்தி போன்ற பல சிந்தனைகளுக்கு கட்டுப்பட்ட பாரதியார் தன்னிடம் ஒரே ஒரு பக்தி மட்டும் இல்லை என்று உறுதிபட உரைக்கிறார்அது தன்னுடைய அறிவுக்கு . ஏற்றுக்கொள்ளாத கருத்தினை ஆண்டவன் கூறினாலும் ஏற்றுக்கொள்ளாத தீயபக்தி என்று பெருமைப்படக் கூறுகிறார்.துஇது பாரதியின் அறிவியல் பார்வையைப் பறைசாற்றுகிற .

**புராணங்களும் பாரதியின் சிந்தையும் :**

அறிவியல் சிந்தனைகளில் மிக முக்கியமானது காலத்திற்கேற்றாற் போல் தன்னை மாற்றிக் கொள்ளுதல் என்பதுபழமை வாதங்களை ஒழித்து விட்டுப் புதுப்புது சிந்தனைகளைச் சிந்தையில் . பாரதியின் சிந்தனைகள் .யும்ஏற்றிச் செயல்படும் சமூகமே வளர்ச்சியை நோக்கி பயணக்க முடி .பழையனவற்றை கழிக்கச்சொன்ன பவனந்தி அடிகளின் கருத்தினை பிரதிபலிக்கிறது

“பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல' (நூற்பா :462)

உலகில் உள்ள ஒவ்வொரு சமூகத்திற்கும் தனித்துவமான இலக்கியங்கள் பல உண்டுஇந்த . இலக்கியங்கள் கதைகள், கற்பனைகளை அடிப்படையாகக் கொண்டதுபுராணங்களும் . இதிகாசங்களும் நம்மின் அடையாளங்களாகத் திகழ்கின்றன ஆதலின் அவற்றைப் பேணிக்காப்பதும் போற்றி வளர்ப்பதும் நம்மின் தலையாயக் கடமையாகும்பாரதியாரின் சிந்தனை . அளப்பரியது அவர் தன்னுடைய அறிவியல் நோக்கில் இலக்கியத்தை பின்வருமாறுஅணுகுகிறார்.

”ஒன்று மற்றொன்றைப் பழிக்கும்;
ஒன்றில் உண்மையென்றோதி
மற்றொன்று பொய்யென்னும்:
நன்று புராணங்கள் செய்தார்.
அதில் நல்ல கவிதை பலப்பல தந்தார்:

கவிதை மிக நல்ல தேனும்,
அக்கதைகள் பொய்யென்று தெளிவுறக் கண்டோம் புவிதனில் வாழ்நெறி காட்டி
நன்மை போதிக்கும் கட்டுக் கதைகள் அவைதாம்”.

நாட்டில் கதைகளுக்கும் புராணங்களுக்கும் இடமுண்டு ஆனால் அவைகள் மனித அறிவினை மேன்மை படுத்துவதாக இருக்க வேண்டும்வெட்டிக்கதைகளும் வேடிக்கைக் கருத்துகளும் மக்களை . குட்படஆதலின் நாம் நம் அறிவிக் .முட்டாள்களாக்கிவிடும் என்றே சாடுகிறார்ுத்தி எதையும் ஆய்ந்து தெளிய வேண்டுமென அறைகூவலும் விடுக்கிறார்.

பாரதியின் அறிவியல் பார்வை விசாலமானது அது தேசப்பற்று, மொழிப்பற்று கொண்டிருந்தாலும் ஒட்டு மொத்த வளர்சியினை அடிப்படையாகக் கொண்டது.

நன்மையும் அறிவும்

எத்திசைத்தெனினும்,
யாவரே காட்டினும்
மற்றவை தழுவி வாழ்வீராயின்
அச்சமொன்றுமில்லை....

(தமிழ்ச்சாதி அடிகள் -119-132)

நன்மையும் நல்லறிவும் எந்தத் திசைகளில் இருந்து வந்தாலும் அதனைச் சரியென்றுபட்ட வழியைத் தயங்காது, தள்ளாது ஏற்பது அறிவியல் உலகின் பண்பாடுஅதற்கு வழி காட்டுவது அறிவியல் . பாரதியிடம் அப .பார்வை பார்வையைக் காண்கிறோம். பாரதி தன் தாய்நாட்டினைப் போற்றிப் பாடுவதோடு நிற்காமல் அதன் மொழி மற்றும் பண்பாட்டின் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்கிறார்அதற்குப் பிறநாட்டிலிருக்கும் . .பணிக்கிறார் நல்லறிஞர்களின் கருத்துகளைத் தமிழில் மொழிபெயர்க்கப்

”பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டுமஇறவாத புகழுடைய புதுநூல்கள்தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்மறைவாக நமக்குள்ளே பழங் கதைகள்சொல்வதிலோர் மகிமை இல்லைதிறமான புலமையெனில் வெளி நாட்டோர்அதைவணக்கஞ் செய்தல் வேண்டும்.” (பாரதியின் தேசிய கீதங்கள் 'மொழி(

நாம் நம் தாய்மொழியைக் கொண்டாடுவது முக்கியமல்ல அதன் சிறப்புகளை உணர்ந்து வெளிநாட்டினரும் பெருமை கொண்டு வந்தனம் செய்திட வேண்டும்அவ்வாரு செய்யும் . நாம் .பொழுதுதான் நம் தாய்மொழியின் அருமையும் பெருமையும் உலக மக்களைச் சென்றடையும் அதற்கு ஆவனசெய்யவும் நம்மைக் கேட்டுக்கொள்கிறார்.

பாரதியின் அறிவியல் பார்வை கல்வியின் முக்கியத்துவத்தைப் பேசுகிறது. அதிலும் பழைமை வாதங்களைப் போதிக்கும் கல்விதனை ஒதுக்கி விட்டுப் புதிய உலகலாவிய கல்வியின் இன்றியமையாமையை அது வலியுறுத்துகிறது. ’தன்னுடைய தமிழருக்கு’ என்னும் கட்டுரையில்தமிழர்களுக்கு ஊக்கம் அழித்து அவர்களின் . பாலினப் பாகுபாடுகள் களைந்து .வாழ்வினைச் சாதி மத பேதங்கள் கடந்து அமைத்துக்கொள்ளவும், சிந்தனையைச் சீர்படுத்திடும் நல்ல கல்விதனைப் பயில சிற்றூர்களிலும் கல்வி நிலையங்கள் பல நிறுவப்பணிக்கிறார்புராணங .களையும் இதிகாசங்களையும் கண்மூடித்தனமாக நம்பாது அறிவிற்கு உகந்த கருத்துகளை மட்டுமே ஆய்வுக்கு உட்படுத்தி ஏற்றுக்கொள்ளச் சொல்கிறார்இது . :பாரதியின் அறிவியல் பார்வையின் ஆழத்தினைப் பின்வருமாரு வெளிப்படுத்துகிறார்

தமிழாபயப்படாதே ., ஊர்தோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் போட்டு ஐரோப்பிய சாஸ்திரங்களை எல்லாம் தமிழில் கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய் ஜாதி வேற்றுமைகளை வளர்க்காதே . பெண்ணை .ஜாதியிரண்டொழிய வேறில்லை என்ற பழந்தமிழ் வாக்கியத்தை வேதமாகக் கொள்" .என்றார் "துணை வாழ்க்கைத்" முற்காலத்துத் தமிழர் மனைவியை .அடிமை என்று கருதாதே அவற்றின் பொரு .வேதங்களை நம்பு .ஆத்மாவும் சக்தியும் ஒன்று ஆணும் பெண்ணும் சமம்ளைத் தெரிந்து கொண்டு பின் நம்புபுராணங்களை .புராணங்களைக் கேட்டுப் பயனடைந்து கொள் . பாரதியார் ) .வேதங்களாக நினைத்து மடமைகள் பேசி விலங்குகள் போல் நடந்து கொள்ளாதே எண்.கள் பகட்டுரை232)

தன்னுடைய ’சிந்தனைச் சித்திரங்கள்’ என்னும் கட்டுரையில் மனிதற்குள்ளிருக்கும் ஆற்றலை நெருப்பிற்கு ஒப்பிடுகிறார்சூரியச்சூட்டினாலே ஏற்படும் அறிவியல் மாற்றங்களைப் . பின்வருமாறு விவரிக்கிறார்:

”மனிதனுக்குள்ளேயும் தீ நிரம்பியிருக்கிறதுள்ளே போட்டதெல்லாம் ஜீரணமாவதற்கு வயிற்றுக்கு . .நம்முள்ளேயிருக்கும் தீயே காரணம் தீ தான் மழை பெய்விக்கிறதுசூரியனென்ற தீ வட்டத்தினின்று பிறக்கும் கதிர்களில் உஷ்ணத்தால் கடல் நீர் முதலியன நீராவியாகி மேகங்களாகின்றன .

விட்டு பூர்வகாலத்து மஹிரிஷிகள் காலையில் எழுந்தவுடன் சூரியனை வணங்கி, அடுத்தபடியாக ஹோமத்தில் வளர்க்கும் தீயை வணங்கினர்."(ப எண்.283)

புகழ்மிக்க ஆங்கிலக் கவிஞர்களில் ஒருவரும் பாரதியாரின் மனம்கவந்தவருமான செல்லி தன்னுடைய புகழ்மிக்க கவிதை Ode to the West Wind (மேல்பருவக் காற்றுக்கு தூது( எனும் கவிதையில் தன் கவிதையில் தன்னுடைய பழமை சிந்தனைகளை இரந்த சிந்தனைகளாக எண்ணுகிறார்அத்தகைய பழமை சிந்தனைக சிந்தனைகளை உத .ிர்ந்த இலைகளுக்கு ஒப்பிட்டு அதனை வெளியேற்றும் பொருட்டு காற்றிடம் கேட்கிறார்மரம் எவ்வாறு தன்னுடைய பழைய . ழைய இலைகளை உதிர்த்து புதிய இலைகளைப் பெருகிறதோ அதனைப்போல மனிதன் ப சிந்தனைகளை களைந்து புதுப்புது வழிகளில் சிந்தித்து தன்னை செம்மைப் படுத்திக்கொள்ள வேண்டும் என்கிறார்.

Drive my dead thoughts over the universe/like withered leaves to quicken a new birth!"

தன்னுடைய 'சிட்டுக்குருவி' என்னும் கட்டுரையில் தெய்வத்திடம் வேண்டுவதாய் அமையப்பட்ட கருத்துகளில் மனிதன் இயற்கையோடு இயைந்த வாழ்வின் நன்மைகளை பின்வருமாரு விவரிக்கிறார்இக்கட்டுரையில் பாரதியார் மேற்கண்ட கவிஞர் செல்லியின் வேண்டுதலையும் . :பிரதிபலிக்கிறார்

"தெய்வமே, எனக்கு இரண்டு சிறகுகள் கொடுக்கமாட்டாயா? பாழ்பட்ட மனிதர் கூட்டத்தையும், அதன் கட்டுகளையும், நோய்களையும் துன்பங்களையும், பொய்களையும் உதறி எறிந்து விட்டு, நான் இச்சைப்படி வானத்திலே பறந்து செல்லமாட்டேனா? ஆஹாஎத்தனை தேசங்கள் ! எத்தனை நாடுகள் !பார்க்கலாம், எத்தனை பூக்கள்எத்தனை சுனைகள் .எத்தனை மலைகள் !, எத்தனை அருவிகள்எத்தனை நதிகள் ., எத்தனை கடல் வெளிகள்வெயில் !, மழை, காற்று, பனி இவையெல்லாம் என் உடம்புக்கு நன்றாய் வழக்கப்பட்டு இவற்றால் நோய்கள் உண்டாகாமல் எப்போதும் இன்ப உணர்ச்சிகளே உண்டாகும் இந்த நிலை எனக்கு அருள் புரியலாகாதா? குருவிக்குப் பேசத் தெரியும்; பொய் சொல்லத் தெரியாதுதீராத :குருவியில் ஆண் பெண் உண்டு . குருவிக்கு வீடுண்டு .கொடுமைகள் இல்லை, தீர்வை கிடையாதுநாயகனில்லை .; சேவகமில்லை"( ப எண்.294)

**நிறைவு**:

பாரதியார் மனிதனைப் பறவையோடு ஒப்பிட்டு மனிதனில் பறவை மகத்தானது என்கிறார் . தெரியாது என்கிற பேருண்மையைப் பதிவு பேசத்தெரிந்த பறவைகளுக்குப் பொய் சொல்லத் இவ்வகையில் நோக்கும் பொழுது பாரதியின் அறிவியல் .செய்கிறார்பார்வை மகத்தானது என்பதை மறுக்க இயலாது.

**மேற்கோள் நூல்கள்**

Mahakavi Bharatiyar Katturaigal(Anthology of Bharati's Essays) Compiled by D, Jeyakandan and 'Sirpi' Balasubramaniam, Sahitya Akademi. New Delhi.

https://www.poetryfoundation.org/poems/45134/ode-to-the-west-wind

பாரதியார் கவிதைகள் (முழுவதும்), திருமகள் நிலையம் விசா பப்ளிகேஷன்ஸ்.



